நேற்று விசில், இன்று துடைப்பம்.. நாளை எதுவோ

# முதல்வரை சந்திக்கும் வரை தீவிரமாகும் தூய்மை பணியாளர்கள் போராட்டம்!

## ரிப்பன் மாளிகை முன்பு 10வது நாளாக தொடர்வதால் பதற்றம்; 100 நாட்கள் ஆனாலும் போராட்டம் தொடரும் என அறிவிப்பு!



சென்னை, ஆக. 31 -

முதல்வர் விஜய் தங்களை நேரில் சந்திக்க வேண்டும் என பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி வரும் தூய்மைப் பணியாளர்கள் நேற்று 10-வது நாளாக துடைப்பம் எடுத்து போராட்டத்தை தொடர்ந்து வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தூய்மை பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வது, மகப்பேறு விடுப்பு, கழிப்பறை மற்றும் ஓய்வறை வசதிகள், சம்பளத்துடன் கூடிய வார விடுமுறை வழங்க வேண்டும் உள்ளிட்ட ஒன்பது அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி உழைப்போர் உரிமை இயக்கம் சார்பில் கடந்த 10 நாட்களாக பல்வேறு விதமான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கிடையே தூய்மை பணியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலிக்கும் வகையில், சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள ஆணையர் அலுவலகத்தில் ஆணையர் சமீரன் தலைமையில் கடந்த 23-ஆம் தேதி பேச்சு வார்த்தை நடைபெற்றது.

### குண்டுகட்டாக கைது!

ஆனால், இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றது. இதனைத் தொடர்ந்து, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள முதல்வர் அலுவலகத்தை முற்றுகையிடும். போராட்டத்தை முன்னெடுத்தனர். அதை தொடர்ந்து, தண்டையார்பேட்டை 4ஆவது மண்டல அலுவலகத்தை முற்றுகையிட்டு தூய்மைப் பணியாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் குண்டுக்கட்டாக கைது செய்தது பதற்றத்தை ஏற்படுத்தியது.

அப்போது, காவல் துறையினர், அவர்களை வாகனத்தில் ஏற்றி அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இதனால் போலீசார் மற்றும் தூய்மைப் பணியாளர்களிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து, சென்னை மாநகராட்சி வளாகத்தில் நடத்திய 6-வது நாள் போராட்டத்தின் போது, மின்சாரத்தை அதிகாரிகள் துண்டித்தனர்.

இதனால் செல்போன் வெளிச்சத்தில் போராட்டம் நடத்தினர்.

அதை தொடர்ந்தும், தூய்மை பணியாளர்களின் போராட்டம் தொடர்ந்து வருகிறது. போராட்டக்காரர்கள் தரப்பில்,"எங்களுடைய கோரிக்கை நிறைவேற வேண்டும். அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். முதல்வர் விஜய் எங்களைச் சந்திக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அரசுத் தரப்பில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நடத்திய முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததால், தங்களின் நியாயமான கோரிக்கைகள் முதல்வரின் கவனத்திற்குச் செல்லும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனத் தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்திருந்தனர்.

### கேட்குதா? கேட்குதா? முதல்வருக்கு கேட்குதா?

இதற்கிடையே, தூய்மைப் பணியாளர்கள் ரிப்பன் மாளிகை முன்பு நேற்று முன்தினம் 9-வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, விசில் அடித்து வினோதமான முறையில் தங்களது போராட்டத்தைத் தீவிரப்படுத்தி னர்.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், "கேக்குதா? கேக்குதா? முதல்வருக்கு கேக்குதா?. நாங்கள் மவுனமாக இருந்தால் எங்கள் கோரிக்கைகள் யாருக்கும் கேட்காது, முதல்வர் விஜய் எங்களை நேரில் சந்தித்துப் பேசும் வரை நாங்கள் இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம்" எனக் கூறி, விசில்களைத் தொடர்ந்து ஊதி தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

இந்நிலையில் நேற்று காலை சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை முன்பு கூடிய தூய்மை பணியாளர்கள் தமிழக அரசை கண்டித்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது துடைப்பத்தால் பெருக்கி த.வெ.க. அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த அங்கு மீண்டும் பதற்றம் நிலவியுள்ளது. பாதுகாப்பு கருதி போலீசார் குவிக்கப் பட்டனர். போராட்டக்காரர்கள் வெளியேற முடியாத வகையில் பேரிகார்டுகள் போட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இது குறித்து போராட்டக்காரர்கள் கூறியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சரின் தேர்தல் வாக்குறுதியின்படி பணி நிரந்தரம் வேண்டும். அரசு ஊழியர்கள் 3வது குழந்தை பெற்றுக் கொள்ள ஒரு ஆண்டு மகப்பேறு விடுப்பு வழங்கப்படுகிறது. ஆனால், தூய்மை பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்க முடியாது என மாநகராட்சி ஆணையர் கூறுகிறார். இது நியாயமான மற்றும் சரியான நிலைப்பாடு அல்ல. கடந்த ஆண்டு நாங்கள் போராட்டம் நடத்திய போது த.வெ.க. தலைவராக இருந்த விஜய், நாங்கள் கேட்கும் கோரிக்கைகளை வாக்குறுதிகளாக கொடுத்தார்.

இப்போது முதல்வராக வந்துவிட்டார், அவர் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளைத் தான் நிறைவேற்றக் கேட்கிறோம். இப்போது வரை எங்களை சந்திக்க அவர் நேரம் ஒதுக்கவில்லை. தொடர்ந்து 10 நாட்களாக போராடி வரும் எங்களை சந்திக்க முதல்வர் மறுக்கிறார். இதை கண்டித்து விசில் அடித்தும், துடைப்பத்தை தூக்கியும் போராட்டம் நடத்தி வருகிறோம். நாளைக்கு என்னென்ன எடுப்போம் என்று எங்களுக்கே தெரியவில்லை.

எனவே, எங்கள் குரலுக்கு முதல்வர் செவி சாய்த்து கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும். முதல்வர் எங்களை சந்திக்கும் வரை 100 நாட்கள் ஆனாலும் எங்கள் போராட்டத்தை நாங்கள் கைவிடமாட்டோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

---

வெளி மாநிலங்களில் Party Fund-ஐ பதுக்கி வைத்து ரீல் தயாரித்து

# பிரதமர் தேர்தல் பிரச்சாரம் செய்வதுதான் தூய ஆட்சியா CM Sir?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!



*நெல்லை, ஆக. 31 -*

*சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-*

*கடந்த தி.மு.க. ஆட்சியில் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு கொடுக்க முற்படுவதாக பொய்யான தகவலை த.வெ.க.தேர்தல் பிரச்சாரம் மேடையில் முழக்கமிட்டு வந்த நடிகர் விஜய் தற்போது “முதல்வர் விஜய்யாக” மாறி இருப்பது மட்டுமே மாநிலத்தில் நிகழ்ந்த ஒரே மாற்றம்.*

*தற்போது ஆட்சிக்கு வந்த முதல்வர் டாஸ்மாக், துப்புரவு பணி, குடிநீர் விநியோகம், அரசு பேருந்து ஓட்டுனர் நடத்துனர் பணி தேர்வு, உத்தரபிரதேச நிறுவனத்திற்கு அனுமதி, தனியார் பங்களிப்புடன் மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்து போக்குவரத்து துறைக்கு மூடு விழா என எல்லாமே தனியாருக்கு, உங்கள் திரைப்படத்தை கூவி கூவி விற்பது போல் விற்று பல ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளை அடிக்கும் ஆட்சியாக செயல்படுத்துவது உண்மை தானே CM Sir?*

*பாட்டிலுக்கு 10 ரூபாய் என்று உங்கள் சொகுசுப் பேருந்தின் மேல் ஏறி நின்று ஆடிப்பாடிய விஜய் அவர்களே! தற்போது முதல்வரானதும் பாட்டிலுக்கு 20 ரூபாய் மற்றும் விவசாயிகளிடம் நெல் மூட்டைக்கு 60 ரூபாய் என்று வசூலிக்கும் பணம் உங்கள் பார்ட்டி பண்டுக்கு தானே வருகிறது CM Sir?*

*தனக்கு நெருக்கமாக இருக்கும் அண்டை மாநிலத்தைச் சேர்ந்த தேர்தல் வியூக ஆலோசகர்கள், திரைப்பட இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோரிடம் உங்களுடைய மொத்த நிர்வாகமும் விலை பேசப்பட்டு தனியார் மயமாக்கி பல ஆயிரம் கோடி ரூபாய் வெளி மாநிலங்களில் Party Fund பதுக்கி வைத்து ரீல் தயாரித்து பிரதமர் தேர்தல் பிரச்சாரம் செய்வதுதான் தூய ஆட்சியா CM Sir?*


*இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலை தளத்தில் கூறியுள்ளார்.*

---

காதர்பாட்சா முத்துராமலிங்கம் தந்தை – முன்னாள் கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினர்

# காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி 14ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## கழக முன்னணியினர் பங்கேற்பு!



*இராமநாதபுரம், ஆக. 31 -*

*இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தந்தையும் முன்னாள் கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினரும், முன்னாள் கமுதி ஒன்றிய கழக பொறுப்பாளர் முன்னாள் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி அவர்களின் 14ஆம் நினைவு நாளை முன்னிட்டு இன்று 31.8.2026 அவரது நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.*

*இதில் இராமநாதபுரம் மாவட்டக் கழக, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் கழகத்தினர்கள் பங்கேற்கின்றனர்.*

---

## ஆடு, மாடு, நாய்கள் தொல்லை!

# மஞ்சாகுப்பம் அரசு நடுநிலைப்பள்ளி மது பாராக மாறும் அவலம்!

திருவள்ளூர் ஆக.31 –

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஒன்றியத்துக்கு உட்பட்ட மஞ்சாகுப்பம் கிராமத்தில் அரசு நடுநிலைப் பள்ளி உள்ளது. சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பள்ளி. 2005ம் ஆண்டு நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. 60க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்த பள்ளியில் பழுதாகி இருந்த சுற்றுச்சுவரை அப்போதைய பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் சுலோச்சனா இடித்து அகற்றினார். சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டு 7 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை மீண்டும் சுற்றுச் சுவரை கட்டித்தர தமிழக அரசு, மாவட்ட நிர்வாகம். பள்ளிக் கல்வித் துறை ஆகியவை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சுற்றுச்சுவர் இல்லாததால் நாய்கள் மற்றும் கால்நடைகள் பள்ளிக்குள் புகுந்து மாணவர்களுக்கு தொல்லை கொடுத்து வருகின்றன. ஆடு, மாடுகள் அனைத்தும் பள்ளி வளாகத்திலேயே சாணம் இடுதல், கோமியம் பெய்தல் செய்வதால் அசுத்தம் ஏற்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் இல்லாததால் இரவு நேரங்களில் குடிகாரர்கள் பள்ளி வளாகத்திலேயே அமர்ந்து மது அருந்துவிட்டு காலி பாட்டில்களை அங்கேயே வீசிவிட்டு சென்று விடுகின்றனர்.

---

ஈரோடு தெற்கு மாவட்டக் கழக மருத்துவ அணி துணை அமைப்பாளர்

# கே.ஜியாவுதீன் குத்தூஸ் இல்ல திருமண விழா!

*ஈரோடு, ஆக. 31 - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடனும், எதிர்கட்சி தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடனும் ஈரோடு தெற்கு மாவட்ட கழக மருத்துவ அணி துணை அமைப்பாளர் கே.ஜியாவுதீன் குத்தூஸ் - ஜெ.சையது ராபியா ஆகியோர் மகள் டாக்டர் நூருல் மர்லியா, ஏ.அபுபக்கர் ஏ.நர்கிஸ்பானு ஆகியோர் மகன் ஏ.அப்துல் ரியாஸ் பி. இ., ஆகியோரின் திருமணம் 6.9.2026 ஞாயிற்றுகிழமை பகல் 10.30 மணிக்கு மேல் ஈரோடு, பவானி மெயின் ரோடு, பிளாட்டினம் மஹாலில் திருமணம் மற்றும் வரவேற்பு விருந்தும் நடைபெற உள்ளது.*

*திருமண விழாவில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி, வார்டு கிளை கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், ஆன்றோர், சான்றோர்கள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.*

---


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.வி.எம்.அ. பொன்மொழி
ஆகஸ்ட் 31 (2017)



பள்ளிப்பருவமாகிய 1965–ல் தான் பயின்ற பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டி, இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி முதல் அமைப்பாளர், மாவட்ட மாநாட்டு தொண்டர் படைத் தலைவர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி தலைவராகவும், கலைஞர் பட்டுக் கூட்டுறவு சங்க இயக்குநராகவும், திருவள்ளூர் பட்டுக் கூட்டுறவு சங்க தலைவராகவும் பொறுப்பேற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“இவரின் நலப்பணிகள் என்றென்றும் மக்கள் மனதில் வீற்றிருக்கும். அவர் விட்டுச் சென்ற கழக பணிகள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொண்டரின் உள்ளத்திலும் குடியிருக்கும்” என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


---

# உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்!

உக்ரைன், ஆக. 31 –

உக்ரைனில் ரஷ்யா நடத்திய வான்வழி தாக்குதலில் 27 பேர் உயிரிழந்தனர். உக்ரைன்ரஷ்யா இடையேயான போர் 5 ஆண்டுகளாக நீடிக்கிறது. இரு தரப்பும் அமைதி பேச்சு வார்த்தைக்கு மறுத்து பரஸ்பரம் தாக்குதல்களை விரிவுப்படுத்தி வருகின்றன. குறிப்பாக கடந்த சில மாதங்களாக பொது உள்கட்டமைப்புகள், எண்ணெய் நிறுவ னங்கள், துறை முகங்கள், கிடங்குகள் உள்ளிட்டவற்றை குறிவைத்து இருநாடுகளும் பரஸ்பரம் தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், உக்ரைனின் தலைநகர் கீவில் உள்ள ஒரு கிடங்கின் மீது நேற்று முன்தினம் ரஷ்யா வான்வழி தாக்குதலை நடத்தியது. இதில் அந்தக் கிடங்கு தீப்பற்றி எரிந்தது. அதைத் தொடர்ந்து அங்கு பயங்கர வெடிப்பு ஏற்பட்டது. தாக்குதலுக்கு உள்ளான கிடங்கில் ஆயுதங்கள் சேகரித்து வைக்கப் பட்டிருந்தாகவும், அவை வெடித்துச் சிதறியதாகவும் கூறப்படுகிறது.

இதில் அந்தப் பகுதியில் உள்ள 50க்கும் மேற்பட்ட குடியிருப்பு கட்டிடங்கள் பலத்த சேதமடைந்தன. ரஷ்யாவின் இந்த தாக்குதலில் 27 பேர் உயிரிழந்ததாகவும், சுமார் 50 பேர் படுகாயம் அடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

---





முன்னாள் கழக சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர்
முன்னாள் கமுதி ஒன்றிய கழக பொறுப்பாளர்

உயர்திரு S.காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி Ex.MLA அவர்கள்

நினைவை போற்றுவோம்

மாண்புமிகு. கேஆர்.பெரியகருப்பன் B.Com.,BL.,
முன்னாள் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர்
மாவட்ட கழக செயலாளர், சிவகங்கை மாவட்டம்.

உயர்திரு. மு.தென்னவன் MA.,
முன்னாள் அமைச்சர்,மாநில இலக்கிய அணி புரவலர்

சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு வம்சம்
எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் B.V.A,PGAID.,
சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர், சிவகங்கை மாவட்டம்.